## பொருள் எண்.1

இந்நகராட்சி பணியாளர்கள் அலுவலகப் பணியாக மேற்கொள்ளும் பயணங்களுக்கான பணியாளர்களுக்கு வழங்கும் பொருட்டு, 2019-20-ம் ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.2,00,000/-க்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.130/2010/இ1

**தீர்மானம் எண்.2038 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.2

இந்நகராட்சி கணிணி பிரிவில் பொருத்தப்பட்டுள்ள Air Conditioner – ல் பழுது ஏற்பட்டு இயங்காத நிலையில் உள்ளதால், சர்வர், கணிணிகள் மற்றும் பிரிண்டர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, மேற்படி Air Conditioner-ல் பழுது நீக்கம் செய்வதற்காக நேரடியாக பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு,

| | | | |
|---|---|---|---|
| 1 | M/s. Sky Cool Air conditioners<br>323, Annai Therasa Salai,<br>Ponappa Nadar Colony,<br>Nagercoil – 4. | 1) Samsung Make 2TR H wall split Air Conditioner Compressor Rs.9,800/-<br>Condensor coil Rs.6100<br>Gas charging Rs.2500/-<br>**Rs. 18,400** | Rs.28,600/- |
| | | 2) LG Make 1.5 TR H wall Split Air Conditioner Compressor Rs.8,000/-<br>Gas charging Rs.2,200/-<br>**Rs 10,200/-** | |
| 2 | M/s. MD Engineers,<br>1, Dennision Road,<br>Near Municipal Office,<br>Nagercoil – 1. | 1) Samsung Make 2 TR H wall split Air conditioner Compressor Rs.10,500/- | Rs.32,100/- |

| | | | |
|---|---|---|---|
| | | Condensor coil Rs.6,800<br>Gas charging Rs.3,500/-<br>Rs. 20,800 | |
| | | 2) LG Make 1.5 TR Hiwall Split Air Conditioner<br>Compressor Rs.8,500/-<br>Gas charging Rs.2800/-<br>Rs 11,300/- | |

மேற்காணும் இரண்டு விலைப்புள்ளிகளில் M/s. Sky Cool Air conditioners, Nagercoil நிறுவனம் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.544/2006/அ2

## தீர்மானம் எண்.2039 அங்கீகரிக்கப்பட்டது

## பொருள் எண்.3

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அரசு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு செல்வதற்காக ஏ.வி.எம் கால்வாயின் குறுக்கே கட்டப்பட்டுள்ள சிறுபாலம் (Small culvert) மிகவும் குறுகலாக உள்ளதால், நோயாளிகள், குழந்தைகள் மற்றும் கர்ப்பிணி பெண்களை மருத்துவ சிகிட்சைக்காக அழைத்து செல்லும் இரண்டு, மற்றும் மூன்று சக்கர வாகனங்கள் மட்டும் மேற்படி சிறுபாலத்தின் வழியாக செல்ல முடிகிறது- மேலும் மேற்படி அரசு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அவசர மருத்துவ சிகிட்சைக்காக அழைத்து வரப்படும் நோயாளிகளை ஏற்றி வரும் 108 அரசு ஆம்புலன்ஸ் வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் சிறுபாலத்தின் வழியாக செல்ல முடியாத நிலையில், பிரதான சாலையோரம் நிறுத்தப்படுவதால், போக்குவரத்திற்கும், நோயாளிகளும், பொது மக்களுக்கும் மிகுந்த சிரமம் ஏற்பட்டு வருகிறது. எனவே பொது நலனை கருத்தில் கொண்டு, ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள சிறுபாலத்தை விரிவாக்கம் செய்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள ரூ.3.50 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.386/2019/இ1

## தீர்மானம் எண்.2040 அங்கீகரிக்கப்பட்டது

## பொருள் எண்.4

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக குடிநீர் குழாய் இணைப்புக்கள் வழங்கும் போது, சாலைகள், மழைநீர் வடிகால் மற்றும் மேல்மூடி, சிறு பாலங்கள் மற்றும் வால்வு பிட்டுக்களில் ஏற்படும் சேதங்கள் மற்றும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யும் பொருட்டு, மேற்படி இனங்களுக்கு 2019-20-ம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள ரூ.4,10,000/- க்கான உத்தேச மதிப்பீட்டிற்கும், மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.487/2019/இ1

**தீர்மானம் எண்.2041 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.5

இந்நகராட்சி 2017-18-ம் ஆண்டிற்கு தணிக்கை புத்தகங்கள் கணணியில் தயார் செய்து பிரிண்டு எடுத்து பைண்டிங் செய்த வகையில் ரூ.14438/- மற்றும் 2017-2018-ம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.88352/- அரசு தலைப்பில் செலுத்தவும், மேற்படி தொகைகளுக்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.942/2012/எச்1

**தீர்மானம் எண்.2042 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.6

இந்நகராட்சி 2019-2020-ம் ஆண்டிற்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள், எழுது பொருட்கள் மற்றும் கணணி பிரிவிற்கு தேவையான பொருட்கள் வாங்க உத்தேச செலவுத் தொகை ரூ.700000/-க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1347/2015/எச்1

**தீர்மானம் எண்.2043 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.7

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு மினி ஆட்டோ எண்.TN-75-P-8399 க்கான 2019-2020-ம் ஆண்டிற்கான தகுதி சான்று பெறுவதற்கு கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவு தொகை ரூ.90000/-க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

பணிகள் விவரம்

1. முழு சேஸ் மேஜர் டிங்கரிங் செய்தல்
2. கியர் பழுது நீக்குதல்
3. கிளட்ச் ஓவரானிங் செய்தல்
4. இருபக்க டோர் சரி செய்தல்
5. அனைத்து கேபிள்களும் மாற்றுதல்
6. ரேடியேட்டர் கிளீன் செய்து கூலண்ட் ஆயில் விடுதல்
7. இஞ்சின் ஆயில் மாற்றி, ஆயில் பில்டர்,டீசல் பில்டர் மாற்றுதல்
8. நான்கு வீல் கழற்றி லைனர் மாற்றி கிரீஸ் வைத்தல்
9. சைலன்சர் புதிதாக மாட்டுதல்
10. முன் இருபக்க இருக்கை சரி செய்தல்
11. முழு சர்வீஸ் செய்தல்
12. முழு பெயிண்டிங் செய்து எழுத்துக்கள் எழுதுதல்
13. எலக்ட்ரிக்கல் செக்கப் செய்தல்
14. பின்புற தொட்டி மற்றும் கேபிள் பகுதிகளில் டிங்கரிங் செய்தல் மற்றும் சில இதர பணிகள் செய்தல்

ந.க.எண்.1406/2014/எச்1

**தீர்மானம் எண்.2044 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.8

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அதிகமான தெரு நாய்கள் சுற்றி திரிவதினால் பொது மக்கள் பள்ளி செல்லும் குழந்தைகள் தெரு நாய்களின் அச்சுறுவதற்கு ஆளாவதுடன் வெறிநாய் கடியாலும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை பொது மக்கள் புகார் அளித்தும் தினசரி நாளிதழ்களில் செய்திகள் வந்த நிலையிலும் உள்ளது. எனவே, பொது சுகாதார நலன் கருதிஅவசர அவசியமாக தெருக்களில் சுற்றி திரியும் தெரு நாய்களின் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு நகராட்சி பகுதியிலே வைத்து கருத்தடை செய்து நாய்களுக்கு எவ்வித துன்புறுத்தலுக்கும் ஆளாக்காமல் பாதுகாப்பாக பிடித்த இடத்திலேயே விடுவதற்கும், மேற்படி கருத்தடை செய்ய மத்திய அரசின் விலங்குகள் நலவாரியத்தினால் அங்கீகாரம் பெறப்பட்ட நிறுவனத்திடம் வழங்குவதற்கும் இதர செலவினங்கள் மேற்கொள்ளவும் உத்தேச செலவுத் தொகை ரூ.450000/-க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.727/2019/எச்1

**தீர்மானம் எண்.2045 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.9

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் துப்புரவு பணியாளர்களின் வேலைக்கு தேவையான தளவா பொருட்கள், பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் கொசு ஒழிப்பு மருந்துகள் பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் பருவ மழைகால முன்னேற்பாடாகவும் கீழ்காணும் பொருட்கள் வாங்க உத்தேச செலவு தொகை ரூ.300000/-க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

<u>பொருட்களின் விவரம்</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | மண்வெட்டி பெரியது | - | 30 எண்ணம் |
| 2. | மண்வெட்டி சிறியது | - | 30 எண்ணம் |
| 3. | கடப்பாறை | - | 4 எண்ணம் |
| 4. | வெட்டுகத்தி | - | 8 எண்ணம் |
| 5. | முள்ளு (கைபிடி இரும்பு) | - | 30 எண்ணம் |
| 6. | கால்வாய் கரண்டி(கைபிடி இருப்பு) | - | 50 எண்ணம் |
| 7. | குப்பை அள்ளும் தட்டு | - | 100 எண்ணம் |
| 8. | பெரிய கூடை (பிளாஸ்டிக்) | - | 50 எண்ணம் |
| 9. | பெரிய மாறு | - | 100 எண்ணம் |
| 10. | கை மாறு | - | 100 எண்ணம் |
| 11. | பிக்காஸ் | - | 5 எண்ணம் |
| 12. | கையுறை | - | 100 ஜோடி |
| 13. | முக கவசம் | - | 100 எண்ணம் |
| 14. | ஷீஸ் | - | 25 ஜோடி |
| 15. | தொப்பி | - | 50 எண்ணம் |
| 16. | ஒளிரும் ஜாக்கெட் | - | 100 எண்ணம் |
| 17. | பைரித்திரம் (2%) | - | 100 லிட்டர் |
| 18. | அபேட் | - | 40 லிட்டர் |

ந.க.எண்.1388/2019/எச்1

## தீர்மானம் எண்.2046 அங்கீகரிக்கப்பட்டது

## பொருள் எண்.10

பாராளுமன்ற தேர்தல் 2019-ஐ முன்னிட்டு, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள 10 வாக்குச்சாவடி மையங்களில் வாக்கு பதிவிற்கு தேவையான வசதிகளை (மின் உபகரணங்கள், மின் விளக்கு, மின் விசிறி, ஜெனரேட்டர், குடிநீர் மற்றும் தண்ணீர் தொட்டி அமைத்தல்) மேற்கொள்வதற்கு நேரடியாக பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | M/s.லீலா சவுண்ட்ஸ், குளச்சல் | ரூ.1,04,895/- |
| 2 | M/s. அஜின் சவுண்ட்ஸ், குளச்சல் | ரூ. 1,09,685/- |

மேற்காணும் இரண்டு விலைப்புள்ளிகளில் M/s.லீலா சவுண்ட்ஸ், குளச்சல் நிறுவனம் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்று, பணியின் அவசர அவசியம் கருதி, பணி உத்தரவு வழங்கியுள்ளதற்கும், அதற்கான செலவினம் ரூ.1,04,895/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.453/2019/இ2

**தீர்மானம் எண்.2047 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.11

குளச்சல் நகராட்சியில் வகுப்பு IV -ல் மேலாளராக பணிபுரிந்து வரும் திருமதி.தி.பிரேமா, நாகர்கோவில் மாநகராட்சிக்கு பணி இடமாறுதல் கேட்டு விண்ணப்பித்துள்ளார். மேற்படி விண்ணப்பம் நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு மேலனுப்ப வேண்டியிருப்பதால் விண்ணப்பத்தை பரிந்துரை செய்து குளச்சல் நகராட்சியிலிருந்து நாகர்கோவில் மாநகராட்சிக்கு மாறுதல் செய்ய இசைவு அளிப்பதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.615/2019/சி1

**தீர்மானம் எண்.2048 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.12

குளச்சல் நகராட்சி திருவிதாங்கூர் கொச்சி மாகாணத்தில் இருந்த போது 1920–ம் ஆண்டு மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டு, அரசாணை நிலை எண்.85 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை) நாள் 22.8.1998–ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. தற்போது அரசாணை நிலை எண்.238 (நகராட்சி

நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை) நாள் 02.12.2008–ன்படி முதல் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டு, 5.18 சதுர கி.மீ. பரப்பளவில் 24 வார்டுகளை கொண்டு செயல்பட்டு வருகிறது. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி, மக்கள் தொகை எண்ணிக்கை 23155 ஆகும். அரசாணையின் படி தோற்றுவிக்கப்பட வேண்டிய ஓட்டுநர் பணியிடஙகள் 6 எண்ணிக்கை ஆகும். ஆனால் தற்போது 3 ஓட்டுநர் பணியிடஙகள் மட்டுமே தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் சுகாதார பணிக்கு 1 காம்பேக்டர் லாரி, 2 மினி டிப்பர் ஆட்டோ, 1 மினி லாரி மற்றும் குடிநீர் வினியோக பணிக்கு 1 குடிநீர் டேஙகர் லாரி மற்றும் 2 ஈப்பு வாகனஙகள் ஆகியவை பயன்பாட்டில் உள்ளது. இந்நகராட்சி பகுதியில் ஒரு நாள் சேகரமாகும் குப்பையின் அளவு 7 மெட்ரிக் டன் ஆகும். தற்போது உள்ள 3 ஓட்டுநர்களில் ஒருவர் ஆணையர் பயன்பாட்டிற்கான ஈப்பு வாகனத்தை இயக்கும் பணியிலும், மீதமுள்ள 2 ஓட்டுநர்கள் பொது சுகாதார பிரிவு குப்பை சேகரிக்கும் வாகனஙகளை இயக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாலும், வறட்சி காலஙகளில் குடிநீர் வினியோகத்திற்கான டேஙகர் லாரியினை இயக்குவதற்கும், மீதமுள்ள ஈப்பு மற்றும் மினி டிப்பர் ஆட்டோ ஆகியவற்றை இயக்குவதற்கும் ஓட்டுநர்கள் போதுமானதாக இல்லாததால், நகராட்சி பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை உரக்கிடஙகிற்கு கொண்டு சேர்ப்பதில் சிரமம் ஏற்பட்டு வருகிறது. எனவே, நிர்வாக நலன் மற்றும் பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டு, கூடுதலாக ஒரு ஓட்டுநர் பணியிடத்தை தோற்றுவிக்க நகராட்சி நிர்வாக ஆணையருக்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் மேற்படி பணியிடத்தை பணிமூப்பு அடிப்படையிலான பதவி உயர்வு மூலம் நிரப்பி கொள்வதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1023/2017/சி1

**தீர்மானம் எண்.2049 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.13

இந்நகராட்சியில் ஒப்பந்த பணிகள் மேற்கொண்ட வகையில் வேலைப்பட்டியலில் பிடித்தம் செய்த 1% மற்றும் 5% வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் இருப்பதால் கீழ்குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர்களுக்கு காலங்கடந்த வைப்புத் தொகை திரும்ப வழங்க மன்றம் அனுமதி கோரப்படுகிறது.

<u>விவரம்</u>

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | வைப்புத் தொகை |
|---|---|---|
| 1 | திரு.T.சுகுமாரன் | 2000 |
| 2 | திரு.T.சுகுமாரன் | 4000 |
| 3 | திரு.T.சுகுமாரன் | 3500 |
| 4 | திரு.T.சுகுமாரன் | 3000 |
| 5 | திரு.Cசெல்லநாடார் | 10000 |
| 6 | திரு.Cசெல்லநாடார் | 1600 |
| 7 | திரு.Cசெல்லநாடார் | 1800 |
| 8 | திரு.Cசெல்லநாடார் | 1200 |
| 9 | திரு.Cசெல்லநாடார் | 3300 |
| 10 | திரு.Cசெல்லநாடார் | 1200 |
| 11 | திரு.Cசெல்லநாடார் | 3200 |
| 12 | திரு.Cசெல்லநாடார் | 2000 |
| 13 | திரு.Cதேவராஜ் | 6194 |
| 14 | திரு.Cதேவராஜ் | 10181 |
| 15 | திரு.Cதேவராஜ் | 6500 |
| 16 | திரு.Cதேவராஜ் | 2000 |
| 17 | திரு.Cதேவராஜ் | 8210 |
| 18 | திரு.Cதேவராஜ் | 3105 |
| 19 | திரு.Cதேவராஜ் | 20000 |
| 20 | திரு.Cதேவராஜ் | 15732 |
| 21 | திரு.Cதேவராஜ் | 6667 |
| 22 | திரு.Cதேவராஜ் | 6498 |
| 23 | திரு.Cதேவராஜ் | 5318 |
| 24 | திரு.Cதேவராஜ் | 5000 |
| 25 | திரு.Cதேவராஜ் | 1300 |
| 26 | திரு.Cதேவராஜ் | 400 |
| 27 | திரு.Cதேவராஜ் | 4000 |
| 28 | திரு.Cதேவராஜ் | 3200 |
| 29 | திரு.Cதேவராஜ் | 1600 |
| 30 | திரு.Cதேவராஜ் | 1800 |
| 31 | திரு.Cதேவராஜ் | 1200 |
| 32 | திரு.Cதேவராஜ் | 3300 |
| 33 | திரு.Cதேவராஜ் குடிநீர் கணக்கு) | 3000 |
| 34 | திரு.Cதேவராஜ் | 1500 |

ந.க.எண்.210/2016/பி1

**தீர்மானம் எண்.2050 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.14

இந்நகராட்சிக்குட்பட்ட டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் அமைந்துள்ள கலைஞர் கருணாநிதி வணிக வளாகத்தின் கடை எண்கள் தரை தளம் 12,13 முதல் தளம் 44,45,46 மற்றும் 53 ஆகியவற்றில் இயங்கி வரும் மின்சார வாரிய அலுவலகத்தின் குத்தகை உரிமம் 30.04.2018-டன் 9 ஆண்டுகள் முடிவடைந்து விட்டது. மேற்படி கடைகளுக்கு மாத வாடகையாக ரூ.6500/- செலுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகத்தை பொது மக்கள் எளிதில் அணுகும் வகையில் மேற்காணும் கடைகள் மின்சார வாரிய அலுவலக பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளதால் பொது மக்கள் நலன் கருதி கடை எண்கள்.12,13,44,45,46 மற்றும் 53 ஆகிய 6 கடைகளுக்கு 01.05.2018 முதல் 30.04.2021 வரை மேலும் 3 ஆண்டுகளுக்கு உரிமம் நீட்டிப்பு செய்வதற்கும் தற்போதைய மாதவாடகையில் 15% உயர்வு செய்யவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

| வ. எண் | கடை எண் | வரிவிதிப்பு எண் | வாடகைதாரர் பெயர் | தற்போதைய வாடகை | 15 சதவீதம் உயர்வு செய்த பின்னர் மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| 1 | 12,13,44,45,46,53 | 148/2009003 | தமிழ்நாடு மின்சார வாரியம் | 6500/- | 7475/- |

ந.க.எண்.1578/2007/அ1

### தீர்மானம் எண்.2051 அங்கீகரிக்கப்பட்டது